வாழ்க்கை ஒரு கிரிக்கெட் தான்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

வாழ்க்கை ஒரு கிரிக்கெட்தான்

இலேமென்ஸ் இவாஞ்ஜலிக்கல் பெல்லோஷிப்
9-B, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை
சென்னை - 600 034

LETS PLAY CRICKET (Tamil)
© Laymen's Evangelical Fellowship International
Copies - 10,000

Published & Distributed by
Beautiful Books
9-B, N.H Road, Chennai - 600 034
Ph : 044-28272393, 28222395
Email : bbooks@eth.net website:
www.lefi.org

உள்ளே உள்ளவை

பக்கம்

முன்னுரை 4

1. தேவபயம் என்பதே இல்லாதவனாக வாழ்ந்தேன்... 7

2. சிற்றின்பத்தை நாடி அலைவதே என் பக்தியாயிருந்தது... 16

3. நான் ஒரு வைராக்கியமான முகமதியனாக இருந்தேன்... 26

4. ஒன்றுக்கும் உதவாத உலகப் பற்றுள்ளவனாக இருந்தேன்... 33

முன்னுரை

சென்னை நகரிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கிடையே நடைபெறும் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியின் அரை இறுதி ஆட்டம் அது. அதுவே நான் முதன் முறையாக ஆடும் மிகப் பெரிய போட்டியாகும். அது மாத்திரமல்ல, என்னுடைய பள்ளிக்காக இதுவே நான் முதன்முறையாக விளையாடும் போட்டியாகும். உண்மையிலே நான் கடைசி ஆட்டக்காரனாக, பதினோராவது ஆளாகத் தெரிந்தெடுக்கப்பட்டேன்.

என்னுடைய குழுவில் நான் தான் வேகமாகப் பந்து வீசுபவனானபடியால் கேப்டன் என்னிடம் பந்தைக் கொடுத்து ஆட்டத்தை ஆரம்பிக்கச் சொல்லிவிட்டார். என்னுடைய இரண்டாவது வீச்சிலேயே ஆட்டக்காரன் ஒருவனை அவுட்டாக்கி விட்டேன். அவன் அவுட்டாகி விட்டானென நடுநிலையாளர் (அம்பையர்) தன் கையை உயர்த்திக் காண்பித்தபொழுது, ஓ! அது எனக்கு எத்தகைய ஆனந்தத்தை அளித்தது தெரியுமா?

அந்த போட்டியை என்னால் மறக்கவே இயலாது. கடைசி ஆட்டக்காரனாக ஆடச்சென்று முதல் இன்னிங்ஸில் பதினொரு ரன்கள் எடுத்து அவுட்டாகாமலேயே இருந்தேன். அதினால் அடுத்த போட்டியில் விளையாடியபொழுது நான் சிறந்த ஆட்டக்காரன் என்று மூன்றாவது இடத்திற்கு உயர்த்தப்பட்டேன். இறுதி ஆட்டத்திலும் நாங்கள் தான் வெற்றி பெற்றோம். சென்னை கிறிஸ்தவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியின் வரலாற்றிலேயே இதற்குமுன் ஒரே ஒரு தடவை தான் சென்னை கிரிக்கெட் சேம்பியன்ஷிப்பை எங்கள் பள்ளி பெற்றிருந்தது. ஆகவே இம்முறை நாங்கள் பெற்ற வெற்றியானது எங்கள் பள்ளி வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஆனால், வெகு விரைவிலேயே என்னுடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு பெரிய குறைவும், தேவையும் என்னிடம் இருந்ததாக நான் கண்டேன். நான் ஒரு பெருமைக்கார வாலிபனாயிருந்தேன். தேவனோடு நான் நேர்மையாகக் காரியங்களைச் சரி செய்ய முடியாதவாறு என்னுடைய பெருமையும்,

தப்பான அபிப்பிராயங்களும் தடுத்து வந்தன. உண்மையான மகிழ்ச்சியை நான் எப்படியும் அடைந்தே தீர வேண்டுமென்று உறுதி பூண்டு, பாவச் சிற்றின்பங்களின் பின்னாக பயங்கரமாக அலைந்து திரிந்தேன். சில ஆண்டுகளுக்குப் பின்னர், "என்னை மகிழ்ச்சியாக வைக்கும் பொருட்டு உலகிற்கு எத்தனையோ தருணங்களைத் தந்தும், நான் மகிழ்ச்சியைப் பெறமுடியவில்லையே, தேவனுக்கு இப்பொழுது ஒரு தருணம் கொடுத்துப் பார்ப்பேன்" என்பதாகத் தீர்மானித்தேன். அப்பொழுது, ஜீவனுள்ள இரட்சகராகிய இயேசு கிறிஸ்து என்னைச் சந்தித்து, நான் வாஞ்சித்துக் கொண்டிருந்த சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்தபொழுது என் வாழ்க்கையிலேயே மாபெரும் பரவசத்தைப் பெற்றேன். நான் பாவ வாழ்க்கையில் அறிந்திருந்த, கடந்துபோகும் சந்தோஷத்தைப்போல் அது இராமல் அதிகமதிகமாய் அதிகரித்து வந்துள்ள சந்தோஷமாக நான் காண்கிறேன். இப்பொழுது நேர்மையுடனும், திறந்த உள்ளத்துடனும் படிக்க ஆரம்பியுங்கள்.

- யோசுவா தானியேல்

தேவபயம் என்பதே இல்லாதவனாக வாழ்ந்தேன்

- ஜீ. ஆபேல்

ஆந்திர மாநிலத்தில் கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள தவ்வுலூர் என்னும் சிற்றூரில் நான் பிறந்தேன். என் பெற்றோர் கனேடியன் பாப்டிஸ்ட் மிஷனைச் சேர்ந்த எளிய மக்கள். அவர்கள் தாமே ஆவிக்குரிய இரட்சிப்பின் அனுபவத்தைப் பெறாததினால், ஜெபம், வேத வாசிப்பு, ஆலயத்திற்குச் செல்லுதல் போன்ற நல்ல கிறிஸ்தவ பழக்க வழக்கங்களைக் கூட அவர்கள் எனக்குக் கற்றுத்தரவில்லை. மனிதனை ஏதோ ஒரு சன்மார்க்கக் கட்டுப்பாட்டின் கீழ் அடக்கி வைக்கும் பொருட்டாக மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றுதான் மதம் அல்லது பக்திமார்க்கம் என நான் நினைத்ததுண்டு. மனிதனை அவனுடைய தீய சுபாவத்திலிருந்து விடுவிக்கத்தக்க வல்லமை மதத்திற்குக் கிடையாதென்றும் நான் எண்ணி வந்தேன். கிறிஸ்தவ ஆலயங்களில் பிரசங்கித்த அநேகர், தாங்கள்

பிரசங்கித்ததைத் தங்கள் சொந்த வாழ்க்கையில்தானே கடைபிடிக்காமல் இருந்ததை நான் பார்த்ததினால் கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறித்தும் இப்படிப்பட்ட தவறான எண்ணமே எனக்குள்ளிருந்தது.

ஓர் வாலிபனாக, இவ்வாழ்க்கையின் எல்லா இன்பங்களையும் நன்கு அனுபவிக்க வேண்டுமென்ற உறுதியுடன் சிகரெட் பிடிக்கவும், சினிமாவிற்குச் செல்லவும், நாடகங்களில் நடிக்கவும் ஆரம்பித்தேன். இவற்றோடு கூட அசுத்தத்தில் மூழ்கி, விபச்சார வாழ்வு வாழவும் முற்பட்டேன். இந்தப் பாவச் சிற்றின்பங்களின் மூலம் ஏதோ சற்று நேர இன்பமே கிடைத்தது. அதன்பின்னர் தாங்க முடியாத துக்கமும், வேதனையும் தான் எனக்குள் இருந்தது. என் பாவ வாழ்வினிமித்தம் என் பாடங்களைக்கூட என்னால் சரியாகப் படிக்க முடியவில்லை. எனவே, படிப்பில் பின்தங்கிய ஒரு மாணவனாக நான் மாறிவிட்டேன்.

தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்விற்காக நான் பாடுபட விரும்பினேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் கட்சி ஒன்றின் தலைவனாக ஆனேன்.

அக்கட்சியின் ஸ்தாபகரைத்தான் நான் வணங்கினேன். கிறிஸ்தவ மாணவர்களுக்குச் சரியான படிப்புதவித்தொகை போன்ற பண உதவிகள் இல்லாமையால், நான் கிறிஸ்தவ மாணவர்களிடம் அவர்களை இந்துக்களாக மாறி அதன் மூலம் இந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குள்ள எல்லா உதவிகளையும் பெற்றுக்கொள்ளும்படித் தூண்டினேன்.

ஒரு மனிதனுக்கு இவ்வுலகில் முதலாவதாக வேண்டியது உண்ண உணவும், உடுக்க உடையும், நல்ல உத்தியோகமுமே என்று எண்ணினேன். மனிதன் கடவுளைக் குறித்து நினைக்க வேண்டிய அவசியமே இல்லை எனவும் நினைத்தேன். அத்தோடு, பரலோகம் (என்பது இருக்கிறதா) என்பதே நிச்சயமில்லை. ஆகவே நம் உடலின் தேவைகளை நாம் முதவாவது திருப்தி செய்ய வேண்டுமென்றும் நினைத்தேன். மனிதன் ஒரு நல்ல வாழ்க்கை இவ்வுலகில் வாழ்ந்தால் அதுவே போதும். அப்பொழுது, மரணத்துக்குப் பின் வாழ்க்கை ஒன்றிருந்தால், கடவுள் என்று ஒருவரும் இருந்தால் அப்பொழுது கடவுளிடம் போய் விடலாம் என்றும்

நினைத்தேன். அதுமாத்திரமல்ல, எம்மதமும் சம்மதமே; எல்லா மதங்களும் ஒரே காரியத்தைத் தான் பல விதங்களில் கூறுகின்றன எனவும் நினைத்தேன். எப்படியாயினும் சன்மார்க்க முறையில் ஒரு நல்ல வாழ்க்கை வாழ எவ்வளவோ வாஞ்சித்த போதிலும் என்னால் முடியவே இல்லை.

என் பெற்றோரோ என்னுடைய நிலையைக் கண்டு அதிகமாகத் துக்கப்பட்டார்கள். நானோ அவர்களுடைய வார்த்தைகளைச் சற்றும் மதித்ததில்லை. என்னுடைய சித்தப்பா ஒருவர் சகோதரன் தானியேல் அவர்களின் கூட்டங்களில் இரட்சிக்கப்பட்டிருந்தார். அவர் என்னிடம், தான் எவ்விதம் இரட்சிக்கப்பட்டார் என்றெல்லாம் கூறுவார். ஆனால் நானோ பாவமும் பொல்லாப்பும் நிரம்பியவனாக தேவன் பக்கமாகத் திரும்ப மறுத்தேன்.

என்னுடைய உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்தபின் என் தகப்பனாரிடம் நான் இந்துவாக மாறி அரசாங்கம் தரும் படிப்புதவித் தொகையைப் பெற்றுக்

கல்லூரி படிப்புக்குப் போகிறேனெனக் கூறினேன். என் தகப்பனாரோ என்னுடைய இந்தத் திட்டத்தை முற்றிலுமாக எதிர்த்தார். நான் கோபமடைந்தேன். எங்கோ மோட்சம் இருப்பதாகவும். அதை அடைய வேண்டுமென்பதாகவும் சொல்லிக்கொண்டு, இவ்வுலகில் நாம் முன்னேறுவதற்கான நல்ல தருணங்களையெல்லாம் இழந்து விடுவது மாபெரும் மதியீனம் என என் தகப்பனாரிடம் கூறினேன்.

இந்த சமயத்தில் நான் சிவில் இஞ்சினியரிங் படிக்கும்படி பாலிடெக்னிக் ஒன்றில் எனக்கு இடம் கிடைத்தது. இந்தப் படிப்பில் சேரும் விஷயமாக என்னுடைய சித்தப்பாவைப் பார்க்கச் சென்றேன். அங்கு சென்றவுடன் அந்த நாள் முழுவதும் என்னுடைய சித்தி எனக்கு ஆவிக்குரிய மறுபிறப்பைக் குறித்து பிரசங்கித்தார்கள். அவர்கள் எப்பொழுதும் கடவுளைக் குறித்தே பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்தபொழுது, நான் எனக்குள்ளே, "என்னுடைய சித்தியும் கூட சில பழங்கால முகமதியர்களைப் போன்று மதவெறி பிடித்தவர்களாகி விட்டார்கள்", எனச் சொல்லிக்

கொண்டேன். நான் அங்கு தங்க விரும்பாதவனாய் அடுத்த நாளே புறப்பட வேண்டுமெனத் தீர்மானித்தேன்.

அதே நாள் இரவு என்னுடைய சித்தி கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லி, அவர் ஒருவரே இரட்சகர் என அழுத்தமாகக் கூறினார்கள். இதை நான் ஏற்க மறுத்து விட்டேன். இராமர், கிருஷ்ணர், முகமது, புத்தர் இவர்களும் கடவுளின் அவதாரங்கள் எனக் கூறி அவர்கள் சொல்லுவதை எதிர்த்தேன். பின்பு என் சித்தப்பா என்னை நோக்கி, "இவர்கள் எல்லாரும் பாவிகளை இரட்சிக்கக் கூடிய அவதாரங்கள் என்றால், நீ அவர்கள் ஒவ்வொருவரிடமும், ஜெபித்து உன் பாவங்களை அறிக்கை செய். அவர்கள் உன் பாவத்தை மன்னித்து உன் வாழ்க்கையை மாற்றினால் அவர்களைக் கடவுள்கள் என்று அழைத்துக்கொள்", என்று கூறினார்கள். மீண்டும் அவர்கள் பேச்சைத் தொடர்ந்து முடிவாக, "கிறிஸ்து தவிர உன்னுடைய பாவம் நிறைந்த வாழ்வை விடுவித்து மாற்ற

வேறொருவராலும் முடியாது", எனக்கூறினார்கள். இவ்வார்த்தைகள் ஆழமாக என் இருதயத்திற்குள் சென்றன.

கிறிஸ்துவைக் குறித்து இன்னும் கொஞ்சம் அவர்கள் பேசிய பின் நாங்கள் மூவரும் ஜெபிக்க முழங்கால்படியிட்டோம். என்னுடைய சித்தப்பா ஜெபிக்க ஆரம்பித்தவுடன் நான் நடுங்க ஆரம்பித்தேன். நான் அவ்விதம் நடுங்கிக் கொண்டிருப்பது உண்மையா என்று என் கண்களைக் கூடத் திறந்து பார்த்தேன். அதன் பின் நான், "ஓ தேவனே, நான் ஒரு பாவி. அறிவில்லாமல் உம்முடைய சத்தியத்திற்கு எதிராக வழக்காடினேன் ஆண்டவரே" என ஜெபித்தேன். இவ்விதம் ஜெபித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு பெரிய ஒளி என் முகத்தில் பிரகாசித்தது. ஆழமாக் மனந்திரும்புதலின் ஆவியால் மேற்கொள்ளப்பட்டு, மனங்கசந்து அழுது என் பாவங்களை அறிக்கையிட ஆரம்பித்தேன். என் நினைவிற்கு வந்த எல்லாப் பாவங்களையும், ஆழமான துக்கத்தோடு அறிக்கையிட்டேன். இவ்விதமாக என் பாவ

வாழ்க்கையை தேவனுக்குமுன் ஊற்றி மூன்று நாட்கள் ஜெபித்துக் கொண்டிருந்தேன். என் இருதயத்தையும், வாழ்க்கையையும் தேவனுக்கு இணங்கி ஒப்புக்கொடுத்த பின் பாவப்பாரம் என் இருதயத்திலிருந்து உருண்டோடிற்று. பெரிய சமாதானமும், சந்தோஷமும் என் இருதயத்தை நிரப்பின. எண்ணங்கள், பார்வைகள், வாஞ்சைகள் அனைத்தும் மாறி எல்லாவித பழைய பழக்கங்களும் நீங்கின.

நான் என்னுடைய சொந்த வீட்டிற்குத் திரும்பினவுடன் மக்கள் என்னைப்பார்த்து நான் முழுவதும் மாற்றப்பட்டிருப்பதைத் தெரிந்து கொண்டனர். நான் என் எதிரிகளிடம் சென்று அவர்களோடு ஒப்புரவானேன். அதன்பின் தேவனுடைய வல்லமையான கரம் என்னை உபயோகப்படுத்த ஆரம்பித்தது. நான் ஜெபித்தபோது பிசாசுகள் ஓடின, வியாதியஸ்தர்கள் சுகமடைந்தனர். நான் மூன்றாண்டுகள் மாணவனாய் இருந்தபோது ஆண்டவர் நான் தூய்மையாக வாழவும், அவருடைய இரட்சிக்கும் வல்லமைக்குச் சாட்சியாகவும்

இருக்கும்படி உதவினார். நான் மாணவனாய் இருந்த சமயத்திலேயே ஒரு நாள் தனிமையாக ஜெபித்துக்கொண்டிருந்தபொழுது ஆண்டவர் என்னிடம் "நீ உன் படிப்பை முடித்தபின் இரண்டு ஆண்டுகள் வேலை செய்துவிட்டு அதன்பின் என்னுடைய ஊழியத்தை செய்ய விரும்புகிறேன்" எனக் கூறினார்.

பொதுப் பணித்துறையில் இரண்டு ஆண்டுகள் நான் வேலை செய்தபின் ஆண்டவர் என்னை அவருடைய பரிசுத்த ஊழியத்திற்கு அழைத்தார். இப்பொழுது திருமணமாகி என்னுடைய மனைவியோடு ஆண்டவர் என்னை வைத்துள்ள இடத்தில் அவருக்குச் சேவை செய்து வருகிறேன்.

சிற்றின்பத்தை நாடி அலைவதே என் பக்தியாயிருந்தது

- ஜீ. பி. சாலொமோன்

நான் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்திருந்தபொழுதிலும் தேவனுடைய வார்த்தையைப் படிக்கவோ, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொள்ளவோ நான் கவலைப்படவில்லை.

இளம் பருவத்திலேயே நான் அநேக அசுத்தப் பாவங்களில் விழுந்து பொல்லாத பழக்கங்களுக்கு அடிமையாகி தேவனுடைய இருதயத்திற்கு அதிக துக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தேன். நான் பள்ளி விடுதியில் தங்கியிருந்ததால் எல்லாவித அசுத்த நாவல்களையும் புத்தகங்களையும் படித்தேன். அதன் விளைவாக என் இருதயம் பாவமான சிந்தனைகளாலும்

வாஞ்சைகளாலும் நிரம்பிற்று. என் கண்களும் அசுத்தமான பார்வையால் நிரம்பியிருந்தன. அவைகளை என்னால் மேற்கொள்ள முடியவில்லை.

"கடவுள் என்று ஒருவர் இருந்தால், அவர் லட்சக் கணக்கான மைல்களுக்கு அப்பால் எங்கோ மோட்சத்திலிருக்கிறார்; அவர் எப்படி நம்முடைய வாழ்க்கையைப்பற்றி கவலை கொள்வார்? என்று சொல்லிக் கொள்வேன். இவ்வுலகில் பிறந்தபின் பாவத்தின் இன்பத்தை அனுபவித்தாக வேண்டும் எனவும் நான் நினைப்பதுண்டு.

என்னுடைய இருபத்தியோராவது வயதில் இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது இராணுவத்தில் சேர்ந்து மூன்றரை ஆண்டுகள் பணிபுரிந்தேன். நான் அப்பொழுது குடித்தும், புகை பிடித்தும், அடிக்கடி சினிமாவிற்குச் சென்றும் வந்தேன். இராணுவத்திலிருந்த அந்நாட்களில் ஒரு துன்மார்க்க வாலிபன் செய்யக்கூடிய எல்லாப் பாவங்களையும் நான் செய்தேன்.

இராணுவத்திலிருந்து திரும்பியவுடன் என்னுடைய சொந்தப் பட்டணத்தில் எனக்கு ஒரு வேலை கிடைத்தது. அப்பொழுது இன்னும் அதிக துன்மார்க்கனாகவும், அசுத்தனாகவும் நான் வாழ்ந்தேன். என்னுடைய துன்மார்க்க வாழ்வினிமித்தம் தீராத இருதய நோய் என்னைத் தாக்கியது. நான் எவ்வளவோ மருந்துகள் சாப்பிட்டும் பயனில்லாமல் போய்விட்டது.

அந்த அலுவலகத்தில் ஓராண்டு வேலை பார்த்தபின் சென்னைக்கு ஒரு தொழிற்படிப்பு படிக்கச் சென்றேன். அக்காலத்தில் சென்னையிலிருந்த பொழுது என் ஆத்துமாவில் நான் அமைதியற்றவனானேன். இரவில் சரியாகத் தூங்குவது கூட அதிகக் கஷ்டமாகிவிட்டது. ஆகவே நான் தூங்குவதற்கு மாத்திரைகளையும் அடிக்கடி சாப்பிட்டு வந்தேன். அதனால் என்னுடைய ஆரோக்கியம் இன்னும் அதிகமாய்க் கெட்டுவிட்டது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆகவே நான் முடிவில் நம்பிக்கையற்ற நிலைக்கு வந்துவிட்டேன்.

ஒரு நாள் பொறியியல் கல்லூரி விடுதியில் உள்ள ஒரு வாலிபனுக்கு நான் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை அவன் என்னுடைய அறைக்கு வந்தபோது அவனை என்னுடன் சினிமாவிற்கு வர முடியுமா எனக் கேட்டேன். அவன், "நான் கிறிஸ்தவனாக இருந்துகொண்டு உன்னோடு கூட எவ்விதம் சினிமாவிற்கு வர இயலும்?" எனச் சொல்லி மறுத்துவிட்டான். இவ்வார்த்தைகள் எனக்கு ஆச்சரியமாக இருந்தன. மீண்டும் அவனை நோக்கி "ஏன் நீ அவ்வளவு பக்தியோடு பேசுகின்றாய்?" என கேட்டேன். அவன் தான் எவ்விதம் துன்மார்க்க ஜீவியத்திலிருந்து விடுதலை பெற்று பாவ மன்னிப்பை பெற்றான் என்று எனக்குக் கூறினான். "நானும் கூட பாவத்திலும், புகை பிடிப்பதிலும், சினிமாவிற்குச் செல்வதிலும் வாழ்ந்து கொண்டிருந்தேன். ஆனால் இலேமென்ஸ் இவான்ஞலிக்கல் பெல்லோஷிப்பைச் சேர்ந்த தேவனுடைய ஊழியக்காரராகிய திரு என். தானியேல் அவர்களிடம் சென்று, தேவனுடைய வார்த்தையைக்

கேட்டபொழுது, ஆண்டவர் என் வாழ்க்கையில் ஒரு மாறுதலைக் கொண்டு வந்தார்" என அவன் கூறினான். நானும் கூட கிறிஸ்து இயேசுவிலிருக்கிற அந்த 'புதிய' ஜீவியத்தைப் பெற இயலுமா என அவனைக் கேட்டேன்.

"தேவன் நிச்சயமாக உனக்கு உதவுவார், நீ வந்து தேவனுடைய வசனத்தைக் கேள்" என அவன் சொன்னான். பின்பு பெல்லோஷிப் கூட்டங்களுக்கு செல்ல ஆரம்பித்தேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை இந்த பெல்லோஷிப்பின் ஆராதனைக்குச் சென்றேன். கூட்டத்தில் உட்கார்ந்து வசனத்தைக் கருத்தாய் கவனிக்க ஆரம்பித்தேன். காலஞ்சென்ற திரு. தானியேல் அன்று பிரசங்கித்தார். அவருடைய செய்தியில் என்னுடைய பாவங்களையும், என்னுடைய வாழ்க்கையில் நடந்த அநேக காரியங்களையும் அவர் குறிப்பிட்டார். அவருடைய செய்தியின் முடிவில், "வாலிபனே, உன் பாவத்தினிமித்தமே பாவமில்லாத கிறிஸ்துவின் சரீரம்

நொறுக்கப்பட்டது. ஆகவே உன் பாவங்களுக்காக மனந்திரும்பு," எனக்கூறினார். இயேசுகிறிஸ்து மனிதரின் பாவத்திற்காக மரித்த அந்த சிலுவையின் காட்சி என் மனதிற்கு முன்பாக வந்தது; சிறு பிள்ளையைப் போன்று ஆண்டவருடைய பிரசன்னத்திலே நான் நொறுக்கப்பட்டேன். கண்ணீரோடு ஆண்டவரை நோக்கி, "ஆண்டவரே நிர்ப்பந்தமான பாவியான என்னைப்போன்ற ஒருவனை நீர் இரட்சிக்க முடியுமானால், நான் உமக்கென்று என் வாழ்க்கை முழுவதும் சாட்சியாக இருக்க விரும்புகிறேன்" எனக் கெஞ்சினேன்.

ஆராதனை முடிந்து என்னுடைய கல்லூரி விடுதி அறைக்குத் திரும்பிச் சென்றேன். ஆனால் என் இருதயத்தில் பெரிய அமைதியற்ற நிலை இருந்தது. ஆகவே நான் ஜெபித்து என்னுடைய பாவங்களை உண்மையான மனஸ்தாபத்தோடு தேவனிடம் அறிக்கை செய்தபொழுது, ஆண்டவருடைய கரமானது என் பேரிலே வந்து என்னுடைய பழைய வாழ்க்கையைக் குறித்து உணர்த்த ஆரம்பித்தது.

நான் முழுவதும் மறந்து போயிருந்த சில காரியங்களை ஆண்டவர் எனக்குக் காண்பித்தார். வேதாகமத்திலிருந்து யோபு 22:5,6 ஐ எனக்குக் கொடுத்தார். "உம்முடைய பொல்லாப்புப்பெரியதும், உம்முடைய அக்கிரமங்கள் முடிவில்லாதவைகளுமாய் இருக்கிறதல்லவோ? முகாந்தரமில்லாமல் உம்முடைய சகோதரர் கையில் அடகு வாங்கி, ஏழைகளின் வஸ்திரங்களைப் பறித்துக்கொண்டீர்." தேவனுடைய வசனம் மிகச் சரியாக என்னுடைய நிலைமையை எடுத்துக் காட்டிற்று. என்னுடைய அயலாரிடமிருந்து சில பொருட்களை அடமானமாக வாங்கி என்னுடைய பெட்டியில் வைத்திருந்தேன். அப்பொருட்களில் ஒரு கோட்டும் இருந்தது. இவ்வளவு தெளிவாக ஆண்டவர் என்னோடு பேசியபொழுது, இன்னும் கருத்தாக என் இருதயத்தை நான் ஆராய முற்பட்டேன். என்னிலுள்ள மறைக்கப்பட்ட இதர பாவங்களையும் காட்டும்படி அவரைக் கேட்டேன். அப்பொழுது ஆண்டவர் எரேமியா 13:27ஐக் காண்பித்தார். "உன் விபசாரங்களையும், உன் கனைக்குதல்களையும்,

வெளியிலே மேடுகளின் மேல் நீ பண்ணின வேசித்தனத்தின் முறைகேடுகளாகிய உன் அருவருப்புகளையும் நான் கண்டேன்; எருசலேமே, உனக்கு ஐயோ! நீ சுத்திகரிக்கப்படமாட்டாயா? இது இன்னும் எத்தனை காலத்துக்குப்பின் நடக்கும்?" அதோடு கூட எசேக்கியல் 18:20 ஐயும் காண்பித்தார். "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்." இவ்வசனங்களை நான் படித்தபொழுது அவைகள் என்னுடைய ஆவிக்குரிய நிலையைத் தெளிவாகக் காட்டின. என்னுடைய அசுத்தமான வாழ்வைக் குறித்த ஓர் ஆழமான பாவ உணர்வு உண்டாயிற்று. இரட்சிப்பின் அனுபவத்தை நான் பெற முடியாதவாறு தடுத்துக் கொண்டிருந்த சில காரியங்களை நான் சரிசெய்ய வேண்டியிருந்தது.

என்னுடைய இருதயத்தில் ஒரு பெண் பெரிய விக்கிரமாக இருந்தாள். அதை முற்றிலுமாக உடைத்தெறிய வேண்டுமென ஆண்டவர் எனக்குக் காண்பித்தார். நான் யார் யாரை வேதனைப்படுத்தி, வஞ்சித்து, சண்டையிட்டிருந்தேனோ

அவர்களனைவருக்கும் மன்னிப்புக் கேட்டு கடிதங்கள் எழுதினேன். என்னுடைய விரோதிகளில் சிலரிடத்தில் நேரடியாக சென்று மன்னிப்புக் கேட்கும்படி முன்னூறு மைல் பிரயாணம் செய்து அவர்களைச் சந்தித்தேன். இவ்விதம் நான் என்னுடைய பாவங்களையெல்லாம் அறிக்கையிட்டு என் மனச்சாட்சியைச் சுத்தம் செய்த பொழுது இயேசு கிறிஸ்துவின் இரத்தம் என் பாவங்கள் முழுவதையும் கழுவிற்று. அப்பொழுது ஆண்டவர் எனக்கு 1கொரி. 6:11 மூலம் பாவ மன்னிப்பின் நிச்சயத்தையும் அருளினார். (அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை.) 'உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும்

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்'. அற்புதமான சந்தோஷமும், சமாதானமும் என் உள்ளத்திற்குள் வந்தன. தேவன் என்னுடைய பாவங்களை மன்னித்த அந்த நாளிலேயே என்னுடைய இருதய வியாதியும் முற்றிலும் குணமாக்கப்பட்டு விட்டது. இரவில் தூக்கமாத்திரைகள் இல்லாமல் தூங்கமுடியாத நிலைமை மாறி அயர்ந்து தூங்க ஆரம்பித்தேன்.

கடந்த இத்தனை காலமாக ஆண்டவர் எனக்கு அநேக மாபெரும் காரியங்களைச் செய்துள்ளார். என்னுடைய அயலாரைக் குறித்த அன்பை அவர் என் உள்ளத்தில் வைத்துள்ளார்.

நான் ஒரு வைராக்கியமான முகமதியனாக இருந்தேன்.

- பீட்டர் இக்பால்

நான் ஒரு வைராக்கியமான முகமதியக் குடும்பத்தில் பிறந்தேன். முதலில் நான் ஒரு கிண்டர் கார்டன் பள்ளியில் படித்தேன். அது ஆண், பெண் பிள்ளைகள் சேர்ந்து படிக்கும் பள்ளி. அங்கு நான் தவறாக நடந்தபடியால், என் பள்ளித் தலைமையாசிரியர் என் தகப்பனாரிடம் என்னை ஓர் ஆண்கள் பள்ளியில் சேர்க்கும்படி கூறிவிட்டார். ஆகவே நான் சென்னை கிறிஸ்தவ கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டேன்.

நான் அப்பள்ளியின் விடுதியில் தங்கிப்படித்தேன். அங்குள்ள விடுதி நண்பர்களின் தீய பழக்கங்கள் என்னையும் பற்றிக்கொண்டன. மாணவர்களிடையே நான் போட்ட சிறுசிறு சண்டைகள் யாவும் என் சமாதானத்தை வெகுவாய் பாதித்தன.

என்னுடைய விடுதியில் மாலையில் நடக்கும் ஜெபக் கூட்டத்தை நான் வெறுக்க முற்பட்டேன். அந்த மாலை ஜெபத்திற்கு வராமலிருக்க வார்டனிடமிருந்து விசேஷித்த அனுமதி வாங்கிக்கொண்டேன்.

என்னுடைய சொந்த வழிகளில் நான் பக்தியுள்ளவனைப் போன்று காட்சியளித்தேன். "அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை, முகமது, அல்லாவின் தூதன்" என்பது போன்ற இஸ்லாமிய கோட்பாடுகள் சிலவற்றைத் தவறாமல் அரபிய மொழியில் சொல்லி வந்தேன். என் பள்ளியில் இயேசு கிறிஸ்து ஒருவரே உலக இரட்சகர் என்பதாகப் போதித்தபொழுது நான் கோபம் கொண்டேன். மத சம்பந்தமான வாதங்கள் நடக்கும்பொழுது என் சக மாணவர்களோடு இஸ்லாமைக் குறித்து வைராக்கியமாய் வாதிடுவதுண்டு.

பின்னர் நான் தாம்பரத்திலுள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்தேன். முன்னர் என் உயர்நிலைப் பள்ளி விடுதியில் தங்கியிருந்து,

இப்பொழுது இதே கல்லூரியில் படித்த ஒரு மாணவனின் மாற்றப்பட்ட வாழ்க்கை எனக்கு ஒரு பெரிய சவாலாக இருந்தது. கிறிஸ்தவ மதத்தின் மேல் நான் கொண்டிருந்த வெறுப்பு நியாயமானதுதானா என இப்பையனின் வாழ்க்கை என்னைத் திரும்பத் திரும்பச் சிந்திக்கத் தூண்டிற்று.

இந்த நிலையில் சென்னையிலுள்ள இலேமென்ஸ் இவாஞ்ஜலிக்கல் பெல்லோஷிப்பின் கூட்டங்களுக்குப் போக ஆரம்பித்தேன். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இந்த பெல்லோஷிப்பைச் சேர்ந்த வாலிபர்கள் சிலர் எங்கள் கல்லூரி மைதானத்தில் மாணவர்களுக்காகக் கூட்டங்கள் நடத்தினர். அக் கூட்டங்களின் மூலமாக நான் என்னுடைய அநேக பாவக்கிரியைகளின் மூலமாகவும், முரட்டாட்டத்தினாலும் ஆண்டவராகிய இயேசுவைச் சிலுவையிலறைகிறேன் என நன்கு உணர்ந்தேன்.

நான் அதிக முன்கோபக்காரனாயிருந்தேன். ஒரு பையனிடம் சண்டை போட்டு

பேசாமலிருந்தேன். அவனிடத்தில் மன்னிப்புக் கேட்பது எனக்குக் கஷ்டமாயிருந்தது. ஆனால் ஆண்டவருக்கு முன்பாக என்னைத் தாழ்த்தினபோது அவனிடத்திலும் மன்னிப்புக் கேட்டுப் பேச ஆரம்பித்தேன்.

என்னுடைய எல்லாப் பாவங்களையும் அறிக்கையிட்டேன். உள்ளம் நொறுக்கப் பட்டவனாகக் கண்ணீர் சிந்தினேன். யார் யாருக்கு விரோதமாக நான் தவறுகள் இழைத்திருந்தேனோ அவர்களிடம் மன்னிப்புக் கேட்கும்படி தேவ ஆவியானவர் என்னை வழி நடத்தினார். அப்பொழுது இயேசு இரட்சகர் என்னோடு சகரியா 3:4 மூலம் பேசினார். "நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச் செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன்". ஆண்டவர் என் உள்ளத்தில் எல்லாப் புத்திக்கும் மேலான அவருடைய சமாதானத்தைக் கொடுத்தார். என் வாழ்க்கையே மாறிவிட்டது. அதன் பின் என் அயலாரோடு சண்டையிட நினைக்கவும்

இயலவில்லை. பாவத்தை விட்டு விட்டு இந்தப் புதிய ஜீவியம் பெற்ற வாலிபர்களுடன் சேர்ந்து வாழ அதிகம் வாஞ்சித்தேன். என் நண்பர்களும் உறவினர்களும் என்னிலுண்டான மாறுதல்களைக் கவனித்தனர்.

ஒரு முறை நான் இண்டர்மீடியட் தேர்வு எழுதிக் கொண்டிருந்த சமயம் என் இந்து நண்பன், தான் எழுதியதை நான் பார்த்து எழுதிக்கொள்ளும்படி என்னைத் தூண்டினான். ஆனாலும் நான் பல்கலைக்கழக பரீட்சையில் தேர்வு பெறுவதைக் காட்டிலும் என் மனச்சாட்சியை தூய்மையாகக் காத்துக் கொள்வதே மிக முக்கியமென உணர்ந்தவனாக அவன் எழுதியதை பார்த்து எழுத மறுத்த விட்டேன். பின்னர் என்னுடைய பி. ஏ. பரீட்சையிலும் கூட ஒரு பாடத்தில் முதன்மையாக வரும்படி ஆண்டவர் எனக்கு உதவி செய்தார். ஓர் ஆண்டு கல்லூரியில் நடைபெற்ற வேதாகமப் பரீட்சையில் முதன்மையாக வந்து பரிசு பெறும்படியும் செய்தார்.

பின்னர் நான் ஆசிரியர் பட்டம் பெற்று, நான் படித்த அதே உயர்நிலைப் பள்ளியில் ஓராண்டு

ஆசிரியராக பணிபுரிந்தேன். அதன்பின் ஆண்டவர் என்னை அவருடைய ஊழியத்திற்கு அழைத்தார்.

தேவன் அவருடைய இராஜ்ஜியத்தின் வேலைக்கு என்னையும் பயனுள்ளவனாகக் கருதி அழைத்ததைக் குறித்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். நான் தகுதியற்றவன் என்ற உணர்வு என்னிலிருந்தபோதும் கூட நான் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து என் வாழ்க்கையை அவருடைய ஊழியத்திற்கு அர்ப்பணிக்கத் தீர்மானித்தேன். ஆண்டவர் என்னோடு ஏசாயா 61:6 மூலம் பேசினார். "நீங்களோ கர்த்தரின் ஆசாரியரென்று சொல்லப்படுவீர்கள். உங்களை நமது தேவனுடைய பணிவிடைக்காரரென்பார்கள்."

என்னுடைய வயோதிகத் தகப்பனாரிடம் இந்த என்னுடைய முடிவினைக் கூறினேன். அது அவருக்கோர் இக்கட்டான நிலைமையாயிருந்தது. என்னைக் குறித்து, உலகப்பிரகாரமாக அவர் கொண்டிருந்த வாஞ்சைகள் யாவும் உடைக்கப்பட்ட நேரமாயிருந்தது. ஆயினும் தேவன் தாமே என்னை

வழி நடத்துகிறாரென்றும், அத்தகைய நிலையில் தடுப்பது ஒரு பயங்கர முடிவைக் கொண்டு வருமெனவும் என் தகப்பனார் அறிந்திருந்தார். நீ தேவனுக்குக் கீழ்ப்படிவதே நலம் என்று கூறினார்.

அந்த நாளிலிருந்து தேவன் அவருடைய ஊழியத்தில் எனக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தந்து வந்திருக்கிறார். எல்லா மனிதரின் பாவத்திற்காக மரித்த இரட்சகராகிய இயேசுவை வெறுத்து வந்த நானே அவரைச் சந்திக்க முடிந்ததானால் இதைப் படிக்கும் வாசகரே நீர் எவ்வளவு அதிகமாக அவர் பக்கம் திரும்ப வேண்டியது அவசியம்!

ஒன்றுக்கும் உதவாத உதைப்பந்தாளனாக இருந்தேன்

- டாக்டர் ஜேம்ஸ் டொப்சன்

நான் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தேன். என் தகப்பனார் ஒரு போதகக் குடும்பத்திலிருந்து வந்தவர். நான் வீட்டில் ஒரே மகனாக இருந்தபடியால் மிகச் செல்லமாக வளர்க்கப்பட்டேன். பள்ளியில் நான் படிக்கும்போதே கெட்ட நண்பர்களோடு நட்புக் கொண்டேன். வீட்டிலிருந்து பணத்தைத் திருடிக்கொண்டு, பெற்றோருக்குத் தெரியாமல் சினிமாவுக்கும் போகவும் ஆரம்பித்தேன்.

நான் பள்ளிக்கு ஒழுங்காகச் செல்லாமல் தெருக்களில் நண்பர்களோடு சேர்ந்து சுற்றிக் கொண்டும், பெண்களைக் கேலி செய்து கொண்டும் அலைந்தேன். புகை பிடிக்கவும் ஆரம்பித்தேன். ஒரு போக்கிரியாக ஆனேன். பள்ளியில் பெரியவர்களை

உடைக்கவும் பலவிதத் தகாத செயல்களில் ஈடுபடவும் செய்தேன். என் வகுப்பு ஆசிரியர்களே என்னைக் கண்டு பயப்பட்டார்கள். பள்ளி வேலைநிறுத்தம் போன்ற காரியங்களில் முன்னின்றேன். என் வீட்டில் என் பெற்றோருக்கு நான் ஒரு தலை வேதனையாக இருந்தேன்.

கல்லூரியில் சேர்ந்தபொழுது என் நிலைமை இன்னும் மோசமாயிற்று. தேவ பயமென்பது கொஞ்சமும் என்னில் இல்லாமற் போயிற்று. சரீர இச்சைகளை பூர்த்தி செய்து கொள்வதே என் வாழக்கையின் குறிக்கோளாயிற்று. ஒரு நாள் என் கல்லூரி வாசலருகே சென்று கொண்டிருந்த பெண்களைக் கேலி செய்து கொண்டிருந்தேன். அதைக் கண்ட ஓர் இந்து மாணவன் என்னிடம், "என்ன, நீ ஒரு கிறிஸ்தவப் பையன்; இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யலாமா?" எனக் கேட்டான். நானோ அதைக் கேட்டு வெட்கமடையாமல், வெகுண்டெழுந்து கெட்ட வார்த்தைகளினால் திட்டி, அவனை அடிப்பதாகவும் பயமுறுத்தினேன்.

விளையாட்டுகள் என்றால் எனக்கு மிகவும் விருப்பம். டேபிள் டென்னிஸ் விளையாட்டில் எத்தனையோ மேட்சுகளில் நான் வெற்றி பெற்றேன். என் கல்லூரி சாம்பியனாக ஆனேன். சென்னை மாநிலக் கல்லூரிக்காக ஆடினேன். ஆயினும் கர்த்தருடைய நாளாகிய ஞாயிற்றுக்கிழமையிலும் மேட்சுகள் ஆடி அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்கியிருந்தேன். மதத்தின் பேரில் ஒரு வெறுப்பு உண்டாயிற்று. எனக்கு இந்துப் பெண்களின் நட்பு இருந்தமையால் என் கிறிஸ்தவப் பெயரைக் குறித்தும் வெட்கப்பட்டேன். பெண்களைப் பார்ப்பதற்கு மட்டுமே நான் ஆலயத்திற்குச் சென்றேன்.

நான் இண்டர்மீடியட் முடித்து மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தேன். அங்கு சேர்ந்ததின் நோக்கமே, டாக்டரானால் ஏராளமாகப் பணம் சேர்க்க முடியும். என்றும், மருத்துவக் கல்லூரியில் எந்தவிதக் கட்டுப்பாடுமில்லாத முறையில் என் சரீர இச்சைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்றும் நான் நினைத்ததால்தான்.

மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த சில மாதங்களுக்குப் பின்னர் ஒரு கிறிஸ்தவக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டேன். ஒவ்வொரு வாரமும் அக்கூட்டம் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்காகவும், நர்சுகளுக்காகவும் நடத்தப்பட்டது. பிரியமில்லாமலேயே நான் அக்கூட்டங்களுக்குச் சென்றேன்.

என்னுடைய குடும்பத்தில் ஜாதகம் வைத்திருத்தல், நல்ல நேரம், நல்ல நாள் பார்த்தல் போன்ற பழக்க வழக்கங்களும் இருந்தன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலையில் இப்படங்களுக்கு நான் பூ வைத்து, சாம்பிராணி காட்டி வணங்குவதுண்டு. இந்த தேவர்களுக்குப் பொருத்தனை பண்ணிக்கொண்டு, பல இந்துக் கோவில்களுக்கும் நான் போவதுண்டு. இவையனைத்தும் தேவனுடைய பார்வையில் பயங்கரமான பாவங்களென ஆண்டவர் எனக்கு யாத். 20:3,4,5 மற்றும் எரேமியா 10:2 மூலம், காண்பித்தார். தேவனுடைய கிருபையினால் இவை எல்லாவற்றிலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தேன்.

ஒரு நாள் சகோ. யோசுவா தானியேல் பிரசங்கித்தார். நான் விருப்பத்துடன் கேட்டேன். அக்கூட்டங்களுக்கு செல்ல ஆரம்பித்தேன். சகோதரர் ஜோ என்னிடம் என் ஆவிக்குரிய வாழ்வைக் குறித்து அடிக்கடிப் பேசுவார். அக்கூட்டங்களில் கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக எனக்கு இரட்சிப்பின் பாதை காண்பிக்கப்பட்டது.

என் பாவங்களை மன்னிக்கும்படி ஆண்டவரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தேன். ஒரு நாள் இவ்விதம் ஜெபித்துக் கொண்டிருந்தபொழுது ஆழமான முறையில் பாவ உணர்வு எனக்குள் வந்தது. நானே அவரை சிலுவையிலறைவதாக உணர்ந்து கதறி அழுதேன். யார் யாரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமோ அவர்களிடம் சென்று மன்னிப்புக் கேட்கவும், திருடிய பொருட்களை உரியவர்களிடம் திருப்பிக் கொடுக்கவும் ஆண்டவர் எனக்கு உதவினார்.

என்னுடைய அசுத்தமான விபச்சார வாழ்க்கையை என் பெற்றோரிடம் அறிக்கையிட்டேன். ஆசிரியர்களிடமும், சக மாணவர்களிடமும் மன்னிப்புக் கேட்டேன். தேவனுக்கு முன்பாகவும், மனிதருக்கு முன்பாகவும் என்னை நான் தாழ்த்தினேன். பின்னர் ஒரு நாள் என் முழு இருதயத்தோடு ஜெபித்துக் கொண்டிருந்த பொழுது தேவன் என்னோடு ஏசாயா 44:22 மூலம் பேசினார். "உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன். என்னிடத்தில் திரும்பு, உன்னை நான் மீட்டுக்கொண்டேன்." என் உள்ளத்தில் மகிழ்ச்சியும் சமாதானமும் உண்டாயிற்று. ஜீவனுள்ள இரட்சகரும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து என் உள்ளத்தை முற்றிலும் திருப்தியாக்கினார். தேவனுடைய மக்களை நேசிக்க ஆரம்பித்தேன். துன்மார்க்கரின் தொடர்பை நீக்கிக்கொண்டேன்.

நான் என் மருத்துவப் படிப்பை முடிக்கும் தருணத்தில், என் உள்ளத்தில் "நான் படித்து

முடித்தபின் என்ன செய்யவேண்டும்?" என்ற கேள்வி எழுந்தது. நான் மேற்படிப்பிற்குச் செல்ல வேண்டுமென என் பெற்றோர் விரும்பினர். இந்திய இராணுவத்தின் மருத்துவப் பிரிவில் சேர்ந்தால் கேப்டன் பதவியும் நிறைய சம்பளமும் கிடைக்குமென இந்திய அரசு எங்களுக்கு ஓர் அறிக்கை அனுப்பியிருந்தது. என்னுடைய உறவினர்கள் சிலரோ நான் பம்பாய்க்குப் போய் அங்கு சொந்தமாக ஓர் மருத்துவமனை வைத்து நடத்தி அதன் மூலம் ஏராளமாய்ப் பணம் சம்பாதிக்கலாமென ஆலோசனை தந்தனர்.

ஆனால் நானோ உபவாசமிருந்து ஜெபித்தபொழுது தேவன் என்னிடம், "நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டு வந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும்" என ஆகாய் 1:8 மூலம் கூறினார்.

நான் என் வாழ்நாள் அனைத்தும் அவருக்கென மருத்துவ மிஷனரியாக ஊழியம் செய்ய வேண்டுமெனக் கூறினார். நான் தேவ சித்தத்திற்குச் சந்தோஷமாய் என்னை ஒப்புக்கொடுத்தேன்.

நான் படிப்பை, முடித்தவுடன் கோயம்புத்தூர் மாவட்டத்திற்குச் சென்று, அங்குள்ள தேவையான சில இடங்களில் உழைக்கும்படி ஆண்டவர் என்னை வழிநடத்தினார். அவருடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, தேவனுக்கு ஊழியம் செய்து வருகிறேன்.

ஐயா, இப்பொழுது உங்களுடைய முறை வந்துள்ளது

ஒரே ஓர் இன்னிங்ஸ் தான்!

கிரிக்கெட் 'போட்டியில் ஒரு இன்னிங்ஸ் என்றால், தன் குழுவிற்காகப் பந்தை அடித்து ஆடுவதற்கோ ஒரே ஒரு தருணம் தான். நான் ஆடிய முக்கியமான போட்டிகள் யாவிலும் எப்பொழுதும் இரண்டு இன்னிங்சுகள் இருந்தன.

முதல் இன்னிங்சில் சரியாக ஆடமுடியாமல் தவறிவிட்டாலும் அதைச் சரிசெய்ய இரண்டாவது இன்னிங்ஸ் இருந்தது.

ஆனால் வாழ்க்கையில் உமக்கு ஒரே ஒரு இன்னிங்ஸ்தான் உண்டு. தேவனுடைய புத்தகமாகிய பைபிள் நமக்கு என்ன சொல்கிறது தெரியுமா? "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபிரேயர் 9:27) இந்த உம்முடைய சரீரத்தில் நீர் செய்துள்ள ஒவ்வொரு கிரியைக்கும் இந்த ஜீவனுள்ள பரிசுத்த தேவனுக்கு நீர் கணக்குக் கொடுக்க வேண்டியுள்ளீர். "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" (ரோமர் 14:12) என தேவ வசனம் நமக்குக் கூறுகின்றது. நிச்சயமாகவே இது நம்மை அதிர்ச்சியடையச் செய்யும் ஒரு காரியமாகும். இன்றைக்கும் அநேகர், தாங்கள் யாருக்குமே கணக்கு ஒப்புவிக்க வேண்டிய அவசியமே இல்லாததைப்

போன்று, சந்தர்ப்பத்திற்கேற்ற முறையில் தங்களைச் சகலவிதமான பாவத்திற்கும், அசுத்தத்திற்கும் உட்படுத்தி தங்கள் மனம் போன போக்கில் வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும், கணக்கொப்புவிக்க வேண்டிய நேரம் சமீபித்து விட்டதென்பதாக ஆண்டவர் சொல்கிறார். கடந்து போகிற ஒவ்வொரு மணி நேரமும் உம்மை, உம்முடைய நியாயத்தீர்ப்பிற்குச் சமீபமாகக் கொண்டு வருகிறது. அப்பொழுது கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன்பாக நியாயந்தீர்க்கப் படும்பொருட்டு நீர் தேவனுக்கு முன்பாகக் நிறுத்தப்படுவீர்.

“நாம் எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி விட்டோம்” என வேதம் கூறுகிறது. (ரோமர் 3:23) சன்மார்க்க வாழ்விலும் எத்தனையோ தடவைகள் தான் தோற்கடிக்கப்பட்டுவிட்டதை ஒவ்வொரு மனிதனும் தன் உள்ளத்தில் நன்கு அறிகிறான்.

ஒரு மனிதனின் ஆவிக்குரிய இருதயத்தைக் குறித்து பேசும் பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியது என்ன? "எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும். பொல்லாங்கனவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" (மாற்கு 7:21-23).

மேலே குறிப்பிட்ட பாவங்களில் ஒன்றைக் கூட தான் செய்யவே இல்லை என ஒருவன் கூறிக்கொள்வானேயாகில் அவன் நிச்சயமாகப் பைத்தியக்காரனேயாவான். அதோடு கூட தன் சகோதரனைப் பகைப்பது கொலை பாதகமென்றும், ஒரு பெண்ணை இச்சையோடு பார்ப்பது விபச்சாரம் என்றும் பைபிள் நமக்குக் கூறுகின்றது.

என்னுடைய சொந்த வாழ்க்கையில், என்னுடைய அசுத்தமான கா..ரியங்களுக்காகவும் நான் என்னையே வெறுத்த சமயங்களும் இருந்தன. பாவம் என்னை திருப்தி செய்யவில்லை என்பதை நான் அறிந்தேன். என்றைக்கோ ஒரு நாள் நான் சந்தோஷமாக இருப்பேனென சொல்லிக் கொள்வதன் மூலம் நான் என்னையே மதியீனனாக்கிக் கொள்கிறேன் என்றும் அறிந்தேன். அப்படியிருந்தும், முழு மனதோடு என்னை நானே பாவத்திற்கும், சாத்தானுக்கும் அடிமையாக்கிக் கொண்டேன். அத்தகையதொரு நேரத்தில் தான் நான் தேவனோடு நேர்மையாக என் காரியங்களை ஒழுங்குபடுத்த முற்பட்டேன்.

இப்பொழுது; நீர் உம்முடைய எண்ணங்களிலும், செயல்களிலும் இந்த அன்பும், பரிசுத்தமுள்ள தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்துவிட்டதை ஒத்துக் கொண்டு, நேர்மையாக அவரிடம் வந்து உம்முடைய எல்லா பாவங்களையும் அவரண்டை அறிக்கையிடும்.

கிறிஸ்து உமக்காக மரித்தார்

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்... அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம்" என பைபிள் நமக்குக் கூறுகின்றது. (ஏசாயா 53:5). கிறிஸ்து சிலுவையிலறையப்படுவதற்கு முன் அவரைப் பயங்கரமான சாட்டைகளினால் கொடூரமான முறையில் அடித்தார்கள். மனிதருடைய பாவங்களுக்காக மரிக்கும்படி மனிதனாக பிறந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான் உம்முடைய பாவங்களுக்காகவும், எங்குமுள்ள எல்லா மனிதரின் பாவங்களுக்காகவும் ஆன ஒரே பிராயச்சித்த பலியாகும்.

ஆகவே உமக்காக மரித்த இரட்சகராகிய இயேசுவை நீர் விசுவாசித்து, உம்முடைய பாவங்களையெல்லாம் அவரிடம் அறிக்கையிடும் பொழுது அவர் உம் பாவங்களை மன்னிக்கின்றார்.

"அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1யோவான் 1:7).

உமது பாவங்கள் யாவும் அந்நேரம் முதற்கொண்டு உம்மைவிட்டு நீங்குகின்றது. அப்பொழுது, நீர் திருடியுள்ள பொருட்களையோ, மற்றவர்களை வஞ்சித்து பெற்றுக்கொண்ட பொருட்களையோ உரியவர்களிடம் போய் அவைகளைத் திருப்பிக் கொடுக்கும்படியாக கிறிஸ்து உம்மை வழி நடத்துகிறார். உம்முடைய விரோதிகளோடும், உம்மைப் பகைக்கிறவர்களோடும் நீர் ஒப்புரவாகி, சமாதானம் பெறும்படி ஆண்டவர் உம்மை நடத்துகிறார். நீர் உம்முடைய மனச்சாட்சியைச் சுத்தம் செய்து கொள்ளும்போது, தேவனின் ஜீவன் உமக்குள் பிரவாகித்து வருகிறது. அப்பொழுது நீர் தேவனுடைய மகனாக ஆகின்றீர். சமாதானமும் சந்தோஷமும் உம் உள்ளத்தில் பாய்ந்தோடுகிறது.

இப்பொழுது, யாவிலும் மேலான மாபெரும் வாழ்க்கை உமக்காக ஆரம்பமாகிறது. நீர் ஆண்டவராகிய இயேசுவின் உண்மையான சீஷனாக அவரைப்பின்பற்றி நடக்கும்பொழுது நீர் வெற்றியின் மேல் வெற்றியடைந்து வீர நடைபோட்டுச் செல்வீர்.

- யோசுவா தானியேல்

வாருங்கள்

உங்களுக்கு ஜெப உதவியும் தேவனுடைய பிள்ளைகளின் தொடர்பும் அவசியம். சென்னையில் எங்களுடைய கூட்டங்களுக்கு வந்து பயனடையுங்கள்.

ஞாயிறு ஆராதனை

ஆங்கிலம் - காலை 9:30 மணிக்கு
தமிழ்&தெலுங்கு- காலை 11:00 மணிக்கு

மத்திய வார ஜெபக்கூட்டம்

புதன் மாலை 6 மணிக்கு

இடம்:

இலேமென்ஸ் இவாஞ்ஜலிக்கல் பெல்லோஷிப்.
9-B நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை- 600034.
தொலைபேசி: 044-28222395
அனைவரும் வருக!

5/-
GF/04

ஜெய கிறிஸ்து

எங்களது மாதப்பத்திரிக்கை ஜெய கிறிஸ்து ஒரு ஆவிக்குரிய முத்துக்களடங்கிய பெட்டகம். சகோ. ஜோ, சகோ. என். தானியேல் அவர்களின் ஆழமான தேவ செய்திகளும், அநேக மிஷனரிமார்களின் வாழ்க்கை சரிதையும், விசுவாச வாழ்க்கையின் அனுபவங்களும், உங்களது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும்.

ஆண்டு சந்தா ரூ. 75/-

தொடர்புக்கு: **ஜெய கிறிஸ்து**
9-B, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை
சென்னை - 600034

எமது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு ஞாயிறும் காலை 6:30 - 7.00 மணிக்கு ஸி தமிழ் தொலைக்காட்சியிலும் மதியம் 2:15 - 3:15 மணிக்கு தமிழன் தொலைக்காட்சியிலும் சகோ. யோசுவா தானியேல் அவர்கள் தேவ செய்தியளிக்கிறார்கள்.

வாராந்திர தொலைக்காட்சி ஒளிபரப்பு

ஆங்கிலம் - தமிழ்	ஸி தமிழ் TV	ஞாயிறு	காலை 6:30 - 7:00
	தமிழன் TV	ஞாயிறு	மாலை 2:15 - 3:15
ஆங்கிலம் - தெலுங்கு	மா மூவிஸ் TV	ஞாயிறு	காலை 6:00 - 6:30
	சுபவார்த்த TV	ஞாயிறு	மாலை 2:00 - 3:00
	சுபவார்த்த TV	வியாழன்	மாலை 8:30- 9:00
ஆங்கிலம் - ஹிந்தி	ஸ்டார் உத்சேவ் TV	சனி	காலை 7:00 - 7:30
	சுப்சந்தேஷ் TV	வியாழன்	மாலை 7:00 - 7:30
ஆங்கிலம் - மராத்தி	TV 9மஹராஷ்டிரா	சனி	காலை 6:30 - 7:00
ஆங்கிலம்-மலையாளம்	சூரியா TV	சனி	காலை 6:00 - 6:30
ஆங்கிலம் - கன்னடம்	ஸி கன்னடா	திங்கள்	காலை 6:00 - 6:30
ஆங்கிலம் - வங்காளம்	ருபாஷி பங்களா TV	ஞாயிறு	காலை 6:30 - 7:00
ஆங்கிலம் - பஞ்சாபி	இ.டி.சி. பஞ்சாபி	ஞாயிறு	மாலை 4:00 - 4:30
ஆங்கிலம் - குஜராத்தி	TV9 குஜராத்தி	ஞாயிறு	காலை 6:30 - 7:00
ஆங்கிலம் - ஒரியா	பிரார்த்தனா TV	ஞாயிறு	காலை 10:30 - 11:00
ஆங்கிலம் - ஒரியா	பிரார்த்தனா TV	ஞாயிறு	மாலை 9:00 - 9:30
ஆங்கிலம் - அஸ்ஸாமி	நியூஸ் லைவ் TV	ஞாயிறு	காலை 6:30 - 7:00

Lets Play Cricket with God (Tamil)
www.lefi.org Rs. 5/-